

மருத தமிழ் மாணவர் உதவி நிதி



பணிகளும் திட்டங்களும்



தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி
நிதியைத் தோற்றுவித்த

அமரர் முத்தமிழ்

வித்தகர்

முருகு

சுப்பிரமணியம்

---

*(இந்த கையேட்டை நீங்கள் படித்த பிறகு
தயவுசெய்து உங்கள் நண்பரிடம்
கொடுங்கள்!)*

தமிழ்ப் பள்ளிகளில் படிக்கும் இந்திய மாணவர்கள், குறிப்பாக ஏழை மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கு முருகு தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் கடந்த 27 ஆண்டுகளாக உதவி வருகிறது.

அமரர் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தமிழ் ஆர்வலர்களால் 1975-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட தமிழ்ப்பள்ளி



இந்நிதியின் அறங்காவலர் வாரியத்தின் அறிவுரைஞரும் புரவலருமான டான்ஸ்ரீ உபைதுல்லா ஒரு மாணவிக்கு நிதிவழங்குகிறார்.



25·7·1995 காலை 11 மணிக்கு

டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே.உபைதுல்லா அவர்களின் அலுவலகத்தில் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கு உதவி நிதி வழங்கப்பட்ட நிகழ்ச்சியில் பிடிக்கப்பட்ட படம்.

மாணவர் உதவி நிதியம் அன்றுமுதல் பல்வேறு வழிகளில் இந்நாட்டில் தமிழ்க் கல்வியின் மேம்பாட்டிற்குத் தொண்டாற்றி வருகிறது.


மலேசிய நண்பன் சனிக்கிழமை 13-11-99

தமிழ்ப்பள்ளி மாணவர் நிதி வாரியம் 54 மாணவர்களுக்கு நிதி வழங்கியது

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் கோலாலம்பூர் மற்றும் காஜாங் வட்டாரத்தில் உள்ள 10 தமிழ்ப்பள்ளிகளைச் சேர்ந்த 54 மாணவர்களுக்கு உதவி நிதியை வழங்கியது.

[illegible] தோட்டம், [illegible] தோட்டம், [illegible] இடங்களில் உள்ள தமிழ்ப் பள்ளிகளையும், பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தா, பெட்டாலிங்ஜெயா விவேகானந்தா, அப்பர் தமிழ்ப் பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள் இவர்கள்.

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதியின் அறங்காவலர் வாரியத்தைச் சேர்ந்த விவேகானந்தன், கிருஷ்ணசாமி, சோதிநாதன், முத்தையா ஆகியோர் இம்மாணவர்களுக்கு தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத்திடமிருந்து நிதியுதவி பெற்ற மாணவர்கள் சிலரையும் பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

ஆரம்பத்தில் நாட்டின் பல பகுதிகளில் உள்ள தமிழ்ப் பள்ளிகளில் மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தை மேற்கொள்வதற்கு இந்நிதி யிலிருந்து உதவிநிதிகள் வழங்கப்பட்டன. பின்னர் ஏழை இந்திய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகளை







இந்நிதியின் அறங்காவலர் வாரியம் வழங்கி வருகிறது.

ஆண்டுதோறும் மொத்தம் 20,000 வெள்ளி முதல் 30,000 வெள்ளி வரையில் இந்திய மாணவர்களுக்கு உதவித் தொகை களாக வழங்கப் படுகின்றன. மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பயிற்சி நோட்டுப் புத்தகங்களையும் இதர குறிப்பேடுகளையும் எழுதுகோல்களையும் வாங்கிக்



கொள்வதற்கு இந்த உதவித் தொகை அவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமின்றி தமிழ்ப் பள்ளியிலிருந்து





<u>14.1.2001-ல்</u> நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்கள். இவர்களுக்கான ரொக்கப் பரிசுகளை (மொத்தம் வெ. 2,000·00) தமிழ்ப்பள்ளி மாணவர்நிதி வழங்கியது.

சென்ற இடை நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் உதவித் தொகைகள் வழங்கப் பட்டுள்ளன.

ஆண்டுதோறும் தேசிய தமிழ்ப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் மூலமாக இந்த உதவிநிதிக் கான விண்ணப்ப படிவங்கள் பள்ளிக் கூடங்களுக்கு விநியோகிக்கப் படுகின்றன. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கான உதவித் தொகைகள் காசோலைகளாக அஞ்சல்வழியாக அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரி யர்களின் மூலமாக வழங்கப் படுகின்றன. இந்நிதியின் அறங்காவலர்கள் சில பள்ளிகளுக்கு நேரில் சென்றும் காசோலைகளை வழங்கியுள்ளனர்.



கிள்ளான், ஈப்போ போன்ற நகரங்களில் காசோலை வழங்கும் நிகழ்ச்சிகள்

நடத்தப்பட்டு அந்த வட்டாரப் பள்ளிகளின் மாணவர்களுக்கு நேரில் உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒத்துழைத்த தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கும் அவர்களின் சங்கத் திற்கும் மாணவர் உதவிநிதி வாரியம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

கிள்ளான் பள்ளத்தாக்கு வட்டார இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான நேர்முக தமிழ் கட்டுரைப் போட்டி நடத்தி ரொக்கப் பரிசுகளையும் இந்நிதி வழங்கியுள்ளது. கடந்த 2001-ஆம் ஆண்டில் தேசிய தமிழர் திருநாள் குழுவினர் நடத்திய மாணவர் கட்டுரைப் போட்டிக்கான பரிசு களையும் தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் வழங்கியது.




மாணவர் உதவிநிதி வாரியம் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்காக வெளியிட்ட நூல்

மலேசிய இந்திய சமூகத் தலைவர்களின் சுருக்கமான வரலாறுகளைக் கொண்ட "சமுதாயச் சுடர்கள்" என்னும் நூலை அச்சிட்டு தமிழ்ப்பள்ளி மாணவர் களுக்கு இவ்வாரியம் இலவசமாக வழங்கியது.

திட்டங்கள்

இந்திய மாணவர்களுக்கு கல்வி உதவி நிதிகளை வழங்கும் பணியை இந்த வாரியம் தொடர்ந்து மேற் கொண்டு வரும்.





<u>29.7.2000-ல்</u>

இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான எழுத்துத்திறன் போட்டி கோலாலம்பூர் - சிலாங்கூர் இந்தியர் வர்த்தக சபை மண்டபத்தில் நடந்தபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

- எதிர்காலத் தமிழ் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் உருவாக்கும் முயற்சியாக நான்காம், ஐந்தாம், ஆறாம் படிவ மாணவர்களுக்கு இலக்கியப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தவும் இந்த வாரியம் திட்டம் வகுத்துள்ளது. நாட்டின் முக்கிய நகரங்களில் இந்த எழுத்துப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும். கதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் சிறந்துவிளங்கும் இலக்கியவாதிகள் இந்தப் பயிற்சிப் பட்டறைகளில் பயிற்சியளிப்பர். இந்நாட்டில் தமிழ்க் கல்வியையும் தமிழ்மொழியையும் வளர்க்கும் பணிகளில் ஒன்றாக இது அமையும்.

- தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்காக சிறப்பு வகுப்புகள் நடத்துவதற்கும் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

- தமிழ்ப்பள்ளி ஆறாம் வகுப்பு மாணவர்கள் ஆங்கிலம், மலாய், கணிதம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சி பெறு வதை உறுதி செய்வ தற்காகசிறப்பு வகுப்பு களை நடத்த ஆர்வம் கொண்ட பொது அமைப்புகளுக்கும் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்களுக்கும் உதவிகள் வழங்கப் படும்.

17.7.2000 மலேசிய நண்பன்

இடைநிலைப்பள்ளிகளின் தமிழ் மாணவர்களுக்கு எழுத்துத் திறன் போட்டி

தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதி வாரியமும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் தேசியப் பேரவையும் இணைந்து தமிழ் மாணவர்களுக்கு ஓர் எழுத்துத் திறன் போட்டியை நடத்துகின்றன. கிள்ளான் பள்ளத்தாக்கில் உள்ள இடைநிலைப் பள்ளிகளில் படிக்கும் தமிழ் மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் கலந்து கொள்ள லாம்.

வரும் ஜூலை 29ம் தேதி காலை மணி 10.00க்கு எண்: 116, (முதல் மாடி) ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், கோலாலம்பூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள கோலாலம் பூர் - சிலாங்கூர் இந்தியர் வர்த்தக சபை மண்டபத்தில் இந்தப் போட்டி நடை பெறும்.

போட்டி துவங்கும் முன்னர் தரப்படும் தலைப்புகளில் ஒன்றின் கீழ் முழுத்தாளில் மூன்று அல்லது நான்கு பக்கங் களில் மாணவர்கள் எழுத வேண்டும். போட்டியில் கலந்து கொள்ளும் மாண வர்கள் அன்று காலை மணி 9.30க்கு மண்டபத்திற்கு வந்து விட வேண்டும். வரும்போது அவர்கள் தங்கள் அடையாளக் கார்டையும் பேனாவை யும் கொண்டு வர வேண்டும். எழுது வதற்கான தாட்கள் தரப்படும்.

இப்போட்டியில் முதல் பரிசு வெ.300, இரண்டாம் பரிசு வெ. 200, மூன்றாம் பரிசு வெ. 150, ஐந்து ஆறுதல் பரிசுகள் தலா வெ. 50. பங்கு பெற்ற எல்லா மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங் கப்படும் என்பதுடன் நண்பகல் உணவும் வழங்கப்படும்.

மறுநாள் ஜூலை 30ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை கோலாலம்பூர் நேதாஜி மண்டபத்தில் நடைபெறும் மலேசியத் தமிழ் எழுத்தா ளர் சங்கங்களின் தேசியப் பேரவை மாநாட்டு விழாவில் பரிசுகள் வழங்கப் படும்.

தமிழ் மொழித் திறன் பெற்ற இடை நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கள் பிஐஎல் ஆசிரியர்கள் மூலமாக கீழ்க் கண்ட பொறுப்பாளரிடம் தங்கள் பெயர்களை வரும் ஜூலை 25ம் தேதிக்குள் பதிந்து கொள்ள வேண்டும்.

திரு.கே.ஏ. குணா, தொலைபேசி எண்: 78333335, கைத்தொலைபேசி எண்: 012-2591632.



எழுத்துத்திறன் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு இந்நிதியின் அறங்காவலர் சங்கநாதம் கிருஷ்ணசாமி சான்றிதழ்களை வழங்குகிறார்.

கிள்ளான் மேரு சாலை தமிழ்ப் பள்ளியில் 2001-ல் உதவிநிதி பெற்ற மாணவர்களுடன் ஆசிரியர்களும் மாணவர் உதவி நிதி அறங்காவலர்களும்.



❑ முதலாவதாக கோலாலம்பூர் சிகாம்புட் தமிழ்ப்பள்ளியின் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு ஆரம்பிக்கப் படுகிறது. இதற்கு ஆகும் செலவை முருகு தமிழ்ப்பள்ளி மாணவர் உதவிநிதி ஏற்றுக்கொள்கிறது.

சுயேச்சையான வாரியம்

தமிழ்க்கல்வியில் அக்கறைகொண்ட மலேசிய இந்தியர்கள் தயாள சிந்தையுடன் வழங்கிய நன்கொடைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதி எந்த ஒரு தனிமனிதருக்கும் அல்லது எந்த ஒரு நிறுவனத்திற்கும் சொந்தமானது அல்ல.

மலேசிய தமிழ்க் கல்விக்கு உரிய இந்த நிதியை ஆரம்பத் திலிருந்து ஒரு சுயேச்சையான அறங்காவலர் வாரியம் நிர்வகித்து வருகிறது.



தமிழ்ப்பள்ளி மாணவர் கல்விநிதி வழங்கும் நிகழ்வு

அழைப்பு

பேரன்புடையீர்!

வணக்கம், தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதி வாரியமும், மலாயா தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கமும் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்துகின்றன.

நாள் : 02.05.2001 புதன்கிழமை

இடம் : ஜாலான் மேரு தமிழ்ப்பள்ளி, கிள்ளான்.

நேரம் : பிற்பகல் 2.00 மணி

இந்நிகழ்வுக்குத் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வருகையளித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்நிகழ்வுக்கு மாநிலத் தமிழ்ப்பள்ளி கண்காணிப்பாளர் திரு. K முருகன் அவர்கள் வருகை தர அன்புடன் இசைந்துள்ளார்.

நன்றி.

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம்

அன்புடையீர், வணக்கம்.

மாணவர்களின் பொருளாதார நலன் கருதி, இவ்வாரியம் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு உதவி நிதி வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

நாள்	: 15.02.2000 (செவ்வாய்),பிற்பகல் மணி 3.00
இடம்	: மேரு சாலை தமிழ்ப்பள்ளி,கிள்ளான்
தலைமை	: திரு.வெ.விவேகானந்தன், தலைவர்,மாணவர் உதவி நிதி வாரியம்
சிறப்பு வருகை	: உயர்திரு.எஸ்.வேலு, PJK., அமைப்பாளர்,சிலாங்கூர் மாநிலத் தமிழ்ப்பள்ளிகள்

தங்கள் வருகையை அன்புடன் எதிர்பார்க்கிறோம். நன்றி.

ஏற்பாடு: *சிலாங்கூர் மாநில தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கம்.*



15.2.2000-ல்

கிள்ளான் மேரு சாலைத் தமிழ்ப் பள்ளியில் உதவிநிதி வழங்கப்பட்ட போது.

இந்த நிதியும் அதன் அறங்காவலர் வாரியமும் எந்த ஒரு நிறுவனத்தையும் சார்ந்திராமல் முற்றிலும் சுயேச்சையாக இயங்க வேண்டும் என்று இந்நிதியின் சாசனத்தில் (விதி 10(a)) தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படியே இந்த வாரியம் இயங்கி வருகிறது.

இந்நிதி தமிழ்ப்பள்ளி மாணவர் நலனுக்காகவும், தமிழ்க் கல்விக்காகவும் மட்டுமே செலவிடப்பட வேண்டும்; வேறு எந்த தருமகாரியங்களுக்கும் செலவிடப்படக் கூடாது என்றும் (விதி 9) அதில் கூறப்பட்டுள்ளது. இந்தவிதிகள் முறையாக அனுசரிக்கப் பட்டு வருகின்றன.

காலஞ்சென்ற சட்டத்துறை அமைச்சர் டான்ஸ்ரீ ஆதி நாகப்பன் மேற்பார்வையில் இந்நிதியின் சாசனம் வரையப் பட்டது.

இந்த அறநிதி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு, இந்நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் கணக்குகள் (லைசென்ஸ் பெற்ற கணக்காளர் நிறுவனத் தால்) தணிக்கை செய்யப் பட்டு, வருமான வரி இலாகாவில் சமர்ப்பிக்கப் படுகின்றன.

1.9.99ல்
தமிழ் நேசனில்
வெளியான செய்தி

தமிழ் நேசன், திங்கட்கிழமை, நவம்பர் 1, 1999

தமிழ்ப்பள்ளி மாணவர் நிதி வாரியம் 54 மாணவர்களுக்கு நிதி வழங்கியது

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் கோலாலம்பூர் மற்றும் காஜாங் வட்டாரத்தில் உள்ள 10 தமிழ்ப்பள்ளிகளைச் சேர்ந்த 54 மாணவர்களுக்கு உதவி நிதியை வழங்கியது.

[illegible], செமினி, ரிஞ்சிங் தோட்டம், பாங்கி, காஜாங், வெஸ்ட்கண்ட்ரி தோட்டம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்ப்பள்ளிகளையும் பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தா, பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா, அப்பர் தமிழ்ப் பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள் இவர்கள்.

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதியின் அறங்காவலர் வாரியத்தைச் சேர்ந்த கே. விவேகானந்தன், கிருஷ்ணசாமி, சோதிநாதன், முத்தையா ஆகியோர் இம்மாணவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.



தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத்திடமிருந்து நிதியுதவி பெற்ற மாணவர்கள் சிலரையும் பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

அறங்காவலர் வாரியம்

முருகு தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதியின் அறிவுரைஞர்:

மூத்த சமுதாயத் தலைவர்

டான்ஸ்ரீ டத்தோ

எஸ்.ஓ.கே. உபைதுல்லா அவர்கள்.

இந்நிதியின் புரவலர் :

கூட்டுறவுக்காவலர்

டான்ஸ்ரீ டத்தோ

கே.ஆர்.சோமசுந்தரம் PSM., DPMS., AMN., JP.,

அவர்கள்.

இந்நிதியின் அறங்காவலர் வாரியத்தின் உறுப்பினர்கள் வருமாறு:

மூத்த பத்திரிகையாளர், எழுத்து வித்தகர்

வே.விவேகானந்தன் AMN., PJK.

ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தானத்தின்

முன்னாள் தலைவர், சமயக்காவலர்

எஸ்.சொக்கலிங்கம் AMN,

முன்னாள் தமிழ்ப்பள்ளிகளின்

அமைப்பாளர், பதிப்பாளர்

ஆ.சோதிநாதன்

முன்னாள் தமிழ் இளைஞர்

மணிமன்றத் தேசியத் தலைவர்,

சங்கநாதம்

க.கிருஷ்ணசாமி AMN,

சமுதாயத் தொண்டர், தொழில் முனைவர்

எம்.பாலகிருஷ்ணன்

சமூக ஆய்வாளர், உளவியல் ஆலோசகர்

கே.ஏ.குணா

தேசிய தமிழ்ப்பள்ளி

ஆசிரியர்கள் சங்கப் பொதுச் செயலாளர்

பி.தருமலிங்கம்

மூத்த இலக்கியவாதி, தொழில் முனைவர்

சை.பீர்முகம்மது

காப்புறுதி மேலாளர்

எஸ்.சுகுமாறன்

முருகு தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத்தின் சீரிய பணிகளுக்கு உதவ விரும்பும் அல்லது ஆலோசனை கூற விரும்பும் பெரியோர்களும் அன்பர்களும் கீழ்க்கண்ட முகவரிகளுடன் தொடர்பு கொள்ளலாம்:

முருகு தமிழ்ப் பள்ளி மாணவர் உதவிநிதி வாரியம்
57, Jalan Bunga Matahari-2,
Taman Maju Jaya, Cheras,
56100 Kuala Lumpur
Tel : 92840542

அல்லது

முருகு தமிழ்ப் பள்ளி மாணவர் உதவிநிதி வாரியம்
SURIA PUBLICATIONS
SH-6, Jalan Jerjah Satu,
Taman Setapak,
53000 Kuala Lumpur.
Tel : 40246102

மலேசிய நண்பன் வெள்ளிக்கிழமை 8-6-2001

தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் வெ. 24,000 வழங்கியது



** கிள்ளானில் நிதியுதவி பெற்ற மாணவர்கள்



** டத்தோ ராஜூ மாணவர்களுக்கு காசோலைகளை வழங்குகிறார். அருகில் திரு. சாகுல் ஹமீது, திரு. பால கிருஷ்ணன்.

இந்த ஆண்டில் நாடு மழுவதும் உள்ள தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கு மொத்தம் 24,000 வெள்ளி நிதியு தவியை தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் வழங்கியது.

இந்த நிதியுதவி வழங் கும் நிகழ்ச்சிகள் அண் மையில் மூன்று நகரங் களில் நடை பெற்றன.

கடந்த ஏப்ரல் 26ம் தேதி செந்துால் கறி ஹவுசில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டரசுப் பிரதேச தமிழ்ப்பள்ளி களைச் சேர்ந்த மாண வர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. கடந்த மே 2ம் தேதி கிள்ளா னில் உள்ள ஜாலான் மேரு தமிழ்ப் பள்ளியில் சிலாங்கூர் மாநில தமிழ்ப்பள்ளிகளின் மாணவர்களுக்கு உதவி நிதி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விரு நிகழ்ச்சிகளி லும் மாணவர்களும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் களும் திரளாகக் கலந்து கொண்டனர். தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத் தின் அறங்காவலர் குழுவைச் சேர்ந்த திரு. வி. விவேகா னந்தன், சங்க நாதம் கிருஷ்ண சாமி, திரு. மு. பால கிருஷ் ணன் ஆகியோர் காசோலைகளை வழங்கினர்.

தமிழ்ப்பள்ளி ஆசிரியர் சங்கத்தில் தலைமைச் செயலாளர் திரு. பி. தருமலிங்கம், சிலாங்கூர் தமிழ்ப் பள்ளி தலைமை ஆசிரி யர்கள் சங்கத் தலைவர் திரு. எஸ். கைலாசம் ஆகியோர் தமிழ்ப் பள்ளி மாண வர் உதவி நிதி வாரியத் திற்கு பாராட்டு களைத் தெரிவித்துக் கொண் டனர்.

மாணவர்களுக்கு டத்தோ ராஜூ அறிவுரை

கடந்த மே 12ம் தேதியன்று ஈப்போவில் நடைபெற்ற நிகழ்ச் சியில் நூற்றுக்கும் மேற் பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். பேரா மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ ஜி. ராஜூ இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு காசோலைகளை வழங்கினார். அவர் உரையாற்றுகையில் மாணவர்களுக்குக் கிடைக்கும் நிதியுதவி சிறியதாக இருந்தாலும் அதை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு கல்வியில் முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தமிழ்ப்பள்ளி களின் தரத்தை மேம்படுத்த அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும் என்றும் டத்தோ ராஜூ அறைகூவல் விடுத்தார்.

தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் தேசியத் தலைவர் திரு. சாகுல் ஹமீது மைதீன் ஷா, இச்சங்கத்தின் பேரா மாநிலத் தலைவர் திரு. பி. ராஜேந்திரன், துணைச் செயலாளர் திரு. என். மனோகரன், செயலாளர் திரு. எம். துரையப்பா முதலி யோர் தமிழ்ப் பள்ளி மாணவர் நிதி வாரியத் திற்குப் பாராட்டு களைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒத்துழைத்த தமிழா சிரியர்கள் சங்கத்திற்கு இந்நிதியின் அறங்கா வலர் வாரிய உறுப் பினர்களான திரு. விவேகனந்தன், சங்கநாதம், கிருஷ்ணசாமி, திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

நாடு முழுவதும் உள்ள மற்ற தமிழ்ப் பள்ளிகளுக்கு காசோலைகள் அஞ்சல் மூலம் அனுப்பப் பட்டன.

தங்கள் மாணவர்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டதைப் பாராட்டி தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத்திற்கு தலைமை ஆசிரியர்கள் கடந்தசில ஆண்டுகளில் எழுதியுள்ள ஏராளமான கடிதங்களில் ஒருசில வருமாறு:

SEKOLAH JENIS KEBANGSAAN (TAMIL),
கங்கார் தேசிய மாதிரி தமிழ்ப்பள்ளி
01000 KANGAR,PERLIS INDERA KAYANGAN TEL & FAKS: *04-9761402*

20.02.2000

மதிப்பிற்குரிய அறங்காவலர்கள்,
திரு.வே.விவேகானந்தன், திரு.சங்கநாதன் கு.கிருஷ்ணசாமி
அவர்களுக்கு ,

வாழ்க .

வணக்கம். தாங்கள் பெருமனதுடன் முன் வந்து வழங்கிய நிதியுதவி (காசோலை) நாங்கள் பெற்றுக்கொண்டோம். மிக்க நன்றி. அப்பணம் அம்மாணவர்கள் பள்ளிக்கட்டணம் செலுத்தவும், சீருடைகள் வாங்கவும் பயன்படுத்தப்பட்டது.

பெர்லிஸ் மாநிலத்தில் ஒரே தமிழ்ப்பள்ளியாக தன்னிச்சையாகத் திகழும் நாங்கள் பல நல்லுங்களின் கவனத்திலிருந்து மறைக்கப்பட்டுள்ளோம். ஆனாலும் உங்களின் தொண்டுள்ளத்திலிருந்து மறைக்கப்படாமைக்கு நாங்கள் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். உங்கள் தொண்டு எதிர்வரும் காலங்களிலும் தொடர வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நீங்கள் கேட்டுக்கொண்டபடி உறுதிப் படிவங்களில் மாணவர்களின் கையெழுத்திட்டு இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பிவைக்கிறேன்.

நன்றி, வணக்கம்.

இக்கண் ,

(கு.. அங்காளம்மாள்)
தலைமை ஆசிரியை
கங்கார் தமிழ்ப்பள்ளி,
கங்கார். பெர்லிஸ்.

S. R. J. K. (TAMIL) TAMAN MELAWATI
Jalan Melawati 5, Taman Melawati, 53100 Kuala Lumpur.
Telefon: 03 - 41053136
தேசிய மாதிரி ஆரம்பத் தமிழ்ப்பள்ளி தாமான் மெலாவத்தி
ஜாலான் மெலாவத்தி 5, தாமான் மெலாவத்தி, 53100 கோலாலம்பூர்.
தொ. பேசி. 03 - 41053136

Kod Sekolah: BBD 7456

Rujukan Tuan:

Rujukan Kami: Bil. (   ).dlm. SRJK (T) TM

2.7.01

அறங்காவலர், தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி,

பேரன்புடையீர்,

வணக்கம், வாழ்க!

தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்காக தாங்கள் ஆற்றிவரும் பணிகளுக்கு மிக்க நன்றி.

2. அதன் தொடர்பில், எங்கள் பள்ளிக்கு இரண்டு மாணவர்களுக்கு தாங்கள் உதவினீர்கள். இதற்கு பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3. இத்தகைய அரும்பெரும் முயற்சி தொடர வேண்டுமாய் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

தங்களுடைய ஒத்துழைப்புக்கும் ஆதரவிற்கும் மிக்க நன்றி.

இக்கண்,
தங்கள் ஒத்துழைப்பை நாடும்,
உண்மையுள்ள

சி.தனசீலன்

S. THANASEELAN
Guru Besar,
SJK (T) Taman Melawati
53100 Kuala Lumpur.

2/7/01



காஜாங் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான காசோலை
விவேகானந்தனிடமிருந்து தலைமை ஆசிரியர் பெறுகிறார்.

S.R.K (TAMIL) LADANG KEMUNING (H-D),
76460 TEBONG, MELAKA
தே. மா. ஆ (தமிழ்) பாடசாலை கெமுனிங் தோட்டம் (ஹெரன்)
தெபோங், மலாக்கா. NO.KOD SEKOLAH:MBD 0066

Bil Surat Tuan: ....

Bil Surat Kami: .... Tarikh: 28 . 01 . 2000

மதிப்பிற்குரிய,
அறங்காவலர்கள்,
57, Jln Bt. Malahari 1
Taman Maju Jaya,
56100 Kuala Lumpur.

ஐயா,

<u>தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதிக்கு மிக்க நன்றி</u>

வணக்கம். தங்களது ஏழு மாணவர்களின் உதவி நிதி காசோலைகளைக் கிடைக்கப்பெற்றேன்.

2. பள்ளிச் சார்பாகவும், பெற்றோர்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

3. இவ்வுதவியினால் மாணவர்களின் கல்வித்தரம் உயர்வதோடு, பெற்றோர்களின் சுமைகளும் குறையுமெனின் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட உதவிகள் மேலும் தொடர வேண்டுகின்றேன்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

நன்றி, வணக்கம்.

அன்புடன்,

R. Pushparani

R. PUSHPARANI
Guru Besar
SRJK(T) Ldg. Kemuning H/D
76460 Tebong, Melaka.

S.J.K.(T) PERMATANG TINGGI
14100 SIMPANG AMPAT, SEBERANG PERAI
பெர்மாத்தாங் திங்கி தமிழ்ப்பள்ளி
14100 சிம்பாங் அம்பாட்., செபராங் பிறை

Tel: 04-5884898 Fax: 5884898

Rujukan Kami :

Tarikh: 8 November 2001

Rujukan Tuan :

The Board Trustees,
Tamil School Children Aid Fund,
Kuala lumpur.

Sir,

Tabung Membantu Murid-Murid Sekolah Tamil

1. With reference to the above, we feel very grateful to your board for providing two of our pupils, T.Panimalar and R.Lilavani with financial aid.

2. We highly appreciate your services and would fully support your activities in the near future.


Thanking you in appreciation.

Yours sincerely,

(AN.VEERASAMY)
Guru Besar,
SJK(T) Permatang Tinggi,
14100 Simpang Ampat,
Seberang Perai.



செந்தூரல் தம்புசாமி பிள்ளை தமிழ்ப் பள்ளியில் மாணவரின் சார்பில் காசோலையை
சங்கநாதம் கிருஷ்ணசாமியிடமிருந்து ஓர்
ஆசிரியை பெற்றுக்கொள்கிறார்.



Date: ....

தலைமையாசிரியை,
திருமதி ரபீதா பார்வதி,
சிலாங்கூர் ரிவர் தமிழ்ப்பள்ளி,
45700 புக்கிட் ரோத்தான்,
சிலாங்கூர். 17.02.00

மதிப்பிற்குரிய அறங்காவலர்கள்,
தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி,
செராஸ், கோலாலம்பூர்.

அன்புடையீர்,

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி

வணக்கம். தாங்கள் எங்கள் பள்ளியைச் சார்ந்த நான்கு மாணவர்களுக்கு அனுப்பிய காசோலை கிடைக்கப் பெற்றோம்.

2. சம்பந்தப்பட்ட மாணவர்களிடமும் இதனை ஒப்படைத்து விட்டோம். இப்பணம் இந்த ஏழை மாணவ மணிகளுக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

3. தங்களின் இந்த நற்சேவை இறைவன் அருளால் சிறந்து விளங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு தங்களின் இவ்வரிய உதவி நிதிக்கு எங்களின் நன்றி மலர்களை சமர்ப்பிக்கின்றோம். வணக்கம்.

இப்படிக்கு,

....

(திருமதி ரபீதா பார்வதி)

RABITAH PARAVATHY BT. ABDULLAH
GURU BESAR
SJK (TAMIL) LADANG SELANGOR RIVER
45700 BUKIT ROTAN
SELANGOR DARUL EHSAN

Acknowledgment

.1-100

SJK (TAMIL) CANTUMAN CHAAH
85400 CHAAH , JOHOR.

Kod Sek : JBD 7074
No. Tel & Fax : 07-9261181
E-mail : jbd7071e@tm.net.my

The Board of Trustees,
Tamil School Children Aid Fund,
57, Jalan Bunga Matahari - 2,
Taman Maju Jaya, Jalan Cheras,
56100 KUALA LUMPUR.

Ruj Tuan
Ruj Kami :

Tarikh : 28 April 2000

Tuan,

<u>BANTUAN KEWANGAN DARIPADA TABUNG MEMBANTU MURID-MURID SEKOLAH TAMIL</u>

Merujuk kepada perkara tersebut di atas, dengan hormatnya bersama-sama ini disertakan perkara-perkara berikut untuk makluman dan tindakan tuan seterusnya:

1. Senarai Pengakuan Penerimaan Bantuan kewangan dari Tabung Membantu Murid-murid Sekolah Tamil.

2. Pihak sekolah menghargai usaha tuan-tuan dan merakamkan ribuan terima kasih atas pemberian bantuan kewangan tersebut kepada murid-murid sekolah ini.

Sekian, terima kasih

"BERKHIDMAT UNTUK NEGARA"

Saya yang menurut perintah,

b/p
M. [illegible]
GURU BESAR
SJK (TAMIL) CANTUMAN CHAAH
85400 CHAAH JOHOR

sk. Fail sekolah

காசோலைகளைப் பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தும் மாணவர்களின் கையொப்பங்கள்.

தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி
TABUNG MEMBANTU
MURID - MURID SEKOLAH TAMIL

57, Jalan Bunga Matahari - 2, Taman Maju Jaya, Jalan Cheras, 56100 Kuala Lumpur.

Date: **20.01.2000**

To

The Board of Trustees,
Tamil School Children Aid Fund,
Kuala Lumpur.

We acknowledge the receipt of financial Aid for the following students from Tamil School Children's Aid Fund:

Student's Name	Amount	Cheque No.	Student's Signature
THESHKUMAR A/L THILLAIRATAN	RM 100.00	586304	தி.தினேஷ்குமார்
PARAMESWARY A/P ANBU ASHAKAN	RM 100.00	586305	PArameswary
JAMES WATSON A/L JOMALA	RM 100.00	586306	watsan
RAJAKUMAR A/L MUNIANDY	RM100.00	387840	Rajkumar
TAMILARASI A/P NAGENDRAN	RM 100.00	387839	Tamilarasi

Signature of the Guru Besar

GURU BESAR
SJK (T) LDG. DOMINION,
43500 SEMENYIH,
SELANGOR DARUL EHSAN.

Seal of the School:



12.5.2001-ல் ஈப்போவில் நடந்த மாணவர்க்கு நிதிவழங்கும் நிகழ்ச்சி

நாடு முழுவதிலும் உள்ள 262 தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு வெ.23,580 உதவி நிதி

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் வழங்கியது

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் நாடு முழுவதிலும் உள்ள 262 தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு இந்த ஆண்டில் மொத்தம் 23,580 ரிங்கிட் உதவி நிதி வழங்கியது.

நாடு முழுவதிலும் உள்ள தமிழ்ப் பள்ளிகளுக்கு உதவி நிதி விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு தலைமை ஆசிரியர்கள் மூலமாக வந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன. தகுதியுள்ள ஏழை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த உதவித் தொகைகள் காசோலைகளாக சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அஞ்சலில் அனுப்பப்பட்டன. சம்பந்தப்பட்ட மாணவர்கள் அந்தக் காசோலைகளைப் பெற்றுக் கொண்டதாக உறுதிப்படுத்தும் கடிதங்களை அனுப்பி இருக்கிறார்கள் என்று தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த பிப்ரவரி 15ம் தேதி கிள்ளான் மேரு சாலைத் தமிழ்ப்பள்ளியிலும் கடந்த ஜூன் 16ம் தேதி செந்தூல் தம்புசாமிபிள்ளை தமிழ்ப் பள்ளியிலும் மாணவர்களுக்கு நேரில் உதவித் தொகைகள் வழங்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவற்றில் அந்த வட்டார தமிழ்ப்பள்ளிகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத்தின் அறங்காவலர்களான திரு. வி. விவேகானந்தன், சங்கநாதம் க. கிருஷ்ணசாமி, திரு. மு. பாலகிருஷ்ணன், திரு. கே.ஏ. குணா ஆகியோர் மாணவர்களுக்கு உதவித் தொகைக்குரிய காசோலைகளை எடுத்து வழங்கினர். தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்காக தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியம் வெளியிட்டுள்ள சமுதாயச் சுடர்கள் என்னும் நூலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

கிள்ளான் மேரு சாலைத் தமிழ்ப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிலாங்கூர் தலைமை ஆசிரியர்கள் மன்றத்தின் செயலாளர் திரு. முத்தையாவும் தமிழாசிரியர்கள் சங்கத்தின் சிலாங்கூர் கிளைத் தலைவர் திரு. எஸ். கைலாசமும் கலந்து கொண்டு பேசுகையில், தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி வாரியத்தின் சேவைகளைப் பாராட்டினர்.

நமது மாணவர்களுக்கு இந்த உதவி நிதி அதிகப் பயனாக இருக்கிறது என்று அவர்கள் கூறினர்.

தம்புசாமி பிள்ளை தமிழ்ப் பள்ளியில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் பேசிய அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. என். சுப்பிரமணியம் இந்த உதவி நிதியின் சேவைத் தொடர வேண்டும் என்று வாழ்த்தினார்.

8.7.2000-ல் மலேசிய நண்பனில் வெளியான செய்தி